In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 181/2016 |
| PW: | 8 |
| காவல் நிலையம்: | கோவில்பட்டி மேற்கு |
| தேதி: | 30-06-2026 நாள்: செவ்வாய் |
| பெயர்: | நவநீதன் |
| த/பெ: | எத்திராஜ் |
| ஊர்: | கோவில்பட்டி |
| வேலை: | சார்பு ஆய்வாளர் ( ஓய்வு) |
| வயது: | 66 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 30.06.2026**
(Accused A1 to A3 present).

**முதல்விசாரணை**

1) நான் 2018 ம் வருடம் எப்போதும் வென்றான் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். 2016 ம் வருடம் நான் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் பணிபுரிந்த போது, 21.04.2016 ம் தேதி பெண் தலைமைக்காவலர் திருமதி. சிவனுத்தாய் 938, என்பவர் பதிவு செய்த நிலைய குற்ற எண். 274/2016, U/s. 448,294(b),323,354 IPC வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் 18.15 மணிக்கு சென்று சாட்சிகள் மூர்த்தி, மாரியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**2)** சாட்சிகள் மஞ்சுளா, கிருஷ்ணம்மாள், சத்ய தேவி, குமார், மூர்த்தி, மாரியப்பன், பெண் தலைமைக்காவலர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் கொடுத்த வாக்குமூலததின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை U/s. 448,294(b),323,354,506(2) IPC ஆக

சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **( மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3) பின்னர் 06.05.2016 ம் தேதி இரவு 20.00 மணிக்கு மற்றொரு வழக்கில் கைது செய்து நிலையத்தில் இருந்தவரை இந்த வழக்கில் நான் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

4) பின்னர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 07.05.2016 ம் தேதி வழக்கின் எதிரிகள் மீது U/s. 448,294(b),323,354,506(2) IPC மற்றும் 4 of TNPHW Act சட்டப்பிரிவு மாறுதல் செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். **( மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இவ்வழக்கில் இரண்டு முறை 21.04.2016 மற்றும் 07.05.2016 ம் தேதிகளில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களை 21.04.2016 ம் தேதி விசாரணை செய்தேன் என்றால் சரிதான்.

2) 21.04.2016 ம் தேதி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்த பிறகு மீண்டும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்ததற்கு தனிப்பட்ட காரணம் ஏதும் உண்டா என்றால் இல்லை. 21.04.2016 ம் தேதிக்கு பிறகு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களை மறுவிசாரணை செய்ததற்கான ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை.

3) சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை செய்யும் போது பட்டியல் சாட்சிகளை மறுவிசாரணை செய்ய வேண்டும் என்றால் சரிதான். 07.05.2016 ம் தேதி தாக்கல்

செய்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் சரியல்ல. 21.04.2016 ம் தேதியில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் U/s. 448,294(b),323,354 IPC யிலிருந்து U/s. 448,294(b),323,354,506(1) IPC ஆக சேர்க்கப்பட்டது.

4) 07.05.2016 ம் தேதியில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் எந்த சட்டப்பிரிவு மாற்றம் செய்யப்பட்டது என்றால் பிரிவு 4 of TNPHW Act சேர்க்கப்பட்டது. 21.04.2016 ம் தேதியில் மாற்றம் செய்யப்பட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தில் 09.05.2016 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த பின்னர் தான் மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

5) இவ்வழக்கில் சாட்சிகளை விசாரிக்காமல் இரண்டாவதாக தாக்கல் செய்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் முறையாக புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும் எனது விசாரணையானது ஒரு தலைப்பட்சமானது என்றாலும் சரியல்ல.

6) இந்த வழக்கில் குமார் என்பவர் அ.சா1 வீட்டிற்கு விரட்டி பிடிக்க போனதால் தான் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக குற்ற இறுதியறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குமார் என்பவரை எதிரிகள் விரட்டி வந்ததாக புகார் ஏதும் கொடுத்துள்ளதாக எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார்.எனது விசாரணையில் குமார் என்பவர் புகார் அளித்தாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7) அ.சா.1 சொன்ன மாதிரி எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் குமார் என்பவர் புகார் கொடுக்க வில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்ததாக கூறியுள்ளாரா என்றால் மிரட்டியதாக கூறியுள்ளார். இந்த வழக்கில் அ.சா.1 மருத்துவமனையில் இருந்து மருத்துவரிடம் அனுமதியின்றி தானாக வெளியேறிய விபரம் பற்றி எனது விசாரணையில் துலங்குமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8) மேற்படி மருத்துவரை 07.05.2016 ம் விசாரணை செய்து அவரிடம் இருந்து காயச்சான்று பெற்றேன். மருத்துவர் காயம்பட்ட நபர் தானாக சென்றதால் கருத்துரை வழங்க இயலாது என்றால் சான்று வழங்கியுள்ளார் என்றால் சரிதான். அதுசம்பந்தமாக அ.சா.1யை மறுவிசாரணை செய்தேனா என்றால் இல்லை.

9) மறுவிசாரணை செய்யாததற்கு காரணம் ஏதும் உண்டா என்றால் இல்லை. எனது விசாரணையில் வலி குறைந்ததாக கூறியுள்ளார். விபத்து பதிவேட்டில் அ.சா.1 12.10 மணியளவில் தான் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார் என்றால் சரிதான்.

10) அதே தேதியில் அ.சா.1 மாலை 05.30 மணியளவில் காவல்நிலையம் வந்து புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். புகாரில் மருத்துவமனையில் இருந்து தானாக வந்துவிட்டது குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 ன் கணவர் சத்யஜோதி என்பவர் சென்னையில் காவலராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான்.

11) புகார் மற்றும் குற்ற இறுதியறிக்கையில் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், பின்பு அ.சா.1 ற்கு எந்த ஒரு காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 எதிரிகள் மீது பொய்யாக புகார்

கொடுக்க வேண்டி பொய்யாக மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார் என்றால் சரியல்ல.

12) அ.சா.1 ன் கணவர் காவல்துறையில் பணிபுரிந்து வந்ததால் அவரது செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகள் அ.சா.1 ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாக சொல்வதும் அ.சா.1யை தள்ளி விட்டதாக சொல்வதோ, அசிங்கமாக பேசி கொலைமிரட்டல் விடுத்ததாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

(**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது** )

**மறுவிசாரணை இல்லை**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.